செ.வெ.எண்: 12/2021 நாள்: 04.08.2021

# செய்தி வெளியீடு

## பாரதபிரதமர் உணவுபதப்படுத்தும் சிறுநிறுவனங்களுக்கான திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல் !!!

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் 2020-2021 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட **"ஆத்மநிர்பார் பாரத் அபியான்"** திட்டத்தின் கீழ் ஒருபகுதியாக அமைப்புசாரா உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களை வலுப்படுத்தும் விதமாக "பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான திட்டம்" அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டு முதல் 2021-2025 வரை 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் 60 சதவீதம் மற்றும் மாநிலஅரசின் 40 சதவீதம் நிதிபங்களிப்புடன் செயல்படுத்தப்படும். இத்திட்டம் **"ஒரு மாவட்டத்திற்கு ஒரு விளைபொருள்"**என்ற அணுகு முறையில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டமானது,மத்திய அமைச்சக உணவுப்பதப்படுத்தும் தொழில் துறைவழியாக, தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனைத்துறை மூலம் செயல்படுத்தப்படும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையின் கீழ் நியமிக்கப்படும் குழுவின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. உணவுப்பதப்படுத்தும் சிறுநிறுவனங்களுக்கான இத்திட்டத்தின் மூலம் தனிநபர் மற்றும் குழு அடிப்படையில், ஏற்கனவே உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு நிறுவனங்களை வலுப்படுத்துதல் அல்லது புதிய நிறுவனங்கள் தொடங்குதல், பொது உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திதருதல், வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதல், தொழில் நுட்பபயிற்சிகள் போன்ற இனங்களக்கு நிதி உதவி வழங்கப்படும். மேலும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவிகுழுக்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் போன்றவைகளுக்கு நிதி உதவி வழங்கப்படும். **"ஒரு மாவட்டத்திற்கு ஒருவிளை பொருள்"** என்ற அடிப்படையில் மாவட்ட வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விளை பொருட்களை பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபட உள்ள சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு, முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் ஒரு சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனம் தகுதியான திட்ட மதிப்பீட்டில் 35 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை நிதி உதவி பெற்று பயன் பெற வாய்ப்புள்ளது. வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். மேலும் சிறு உணவுபதப்படுத்தும் நிறுவனங்களுக்கு தேவைப்படும் தொழில் கடன் தொகை, வங்கி மூலம் ஏற்பாடு செய்து தரப்படும். ஆகவே, திருப்பூர் மாவட்டத்தில் ஏற்கனவே இயங்கிவரும் சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள்மற்றும் மாவட்ட வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விளை பொருட்களை (திருப்பூர் - கோழித் தீவனம்) பதப்படுத்தும்

தொழிலில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள மற்றும் புதியதாக ஈடுபட உள்ள நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகளை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாவட்ட வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விளை பொருட்களின் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், விவரங்களுக்கு கோயம்புத்தூர்(Mobile number-9865678453, E-mail ID – ddab.coimbatore2@gmail.com) மாவட்ட வேளாண்மைதுணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அவர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**